காரணத்தால் தான் இப்படிப்பட்ட பிரச்சினையே ஏற்படுகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இதைப்பற்றி நிதிநிலையைப் பொறுத்து அரசு ஆராயும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *169*, திரு ஏ.தா. பொன்னுவேலு, இருக்கையில் இல்லை.

வினா எண் 170, திரு. ஆர். பி. பரமசிவம் ; மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

170--

அரசு குடியிருப்புகளில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கு அக்குடியிருப்புகளைச் சொந்தமாக்குதல்

***21743-** திரு. ஆர். பி. பரமசிவம்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு குடியிருப்புகளில் குடியிருந்துவரும் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வழங்கி அவர்களுக்கு அவ்வீடுகளைச் சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு என்ற இந்த மூன்று அடிப்படை வசதிகள் இந்த பூபாகத்தில் அவதரித்த அனைவருக்கும் தேவை என்ற உணர்வில் நமது இதய தெய்வம் அவர்கள், இந்த மூன்று அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைக்க முழு கவனம் செலுத்தி வருவதை நாம் அறிவோம். எனவே, அரசின் நிதிநிலை காரணமாக இந்த அரசு குடியிருப்புகள் சரிவர பராமரிக்க முடியாமல் இருப்பதை நாம் அறிய முடிகிறது. ஆகவே, மறு பரிசீலனை செய்து இந்த வீடுகளை, குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்குச் சொந்தமாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு குடியிருக்க கொடுக்கப்படுகிற வீடுகள் இன்றைக்கு தமிழக வீட்டுவசதி வாரியத்தால் ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, அந்த வீடுகள் அரசு ஊழியர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றலாகிச் செல்கிற நேரத்தில், அந்த நகர்ப்பகுதிகளில், அதிக வாடகை கொடுத்து அவர்கள் குடியிருக்க வேண்டிய சூழ்நிலையை தவிர்ப்பதற்காக குறைந்த வாடகையில் அவர்கள் குடியிருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கத்தால் கட்டி கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அரசு குடியிருப்புகளை அரசு அலுவலர்களுக்கு சொந்தமாக்கித் தருகிற திட்டம் எதுவும் அரசிடத்தில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு அடிக்கடி மாற்றம் வருகிற காரணத்தால் முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள். நாம் தற்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். மிக அதிகமான அரசு ஊழியர்கள் தங்களது ஓய்வு காலத்தில் சொந்த வீடு இல்லாமல் அவதிப்படுவதைப் பார்க்கிறோம். ஆகவே, குறைந்தது 15, 20 ஆண்டுகள் ஒரே இடத்தில் இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு வீட்டைச் சொந்தமாக்கிக் கொடுப்பதற்கு கடன் வசதி செய்து கொடுத்தால் வருமானம் இல்லாமல் கடைசி காலத்தில் இருக்கிற அந்தச் சூழ்நிலையில் சொந்த வீடு கிடைத்த அளவில் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படும். ஆகவே, மறுபரிசீலனை செய்து, குறைந்தது 15,20 ஆண்டுகள் இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு வீட்டைச் சொந்தமாக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறக்குறைய 11,50,749 அரசு ஊழியர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அதில் நம்முடைய வீட்டு வசதி வாரியத்தால் 20,729 வீடுகள் மட்டுமே இன்றைக்கு வாடகைக்கு குடியிருப்பதற்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கே இடப்பற்றாக்குறை போன்றவைகள் இருக்கின்றன. அந்த நிலைமையிலே இருக்கிற வீடுகளை குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுத்தால், எதிர்காலத்திலே அவர்களுக்கு வாடகைக்குக் குடியிருக்க வீடுகள் கட்டிக் கொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்படும். மேலும் அரசு

ஊழியர்கள் சொந்தமாக வீடு வேண்டும் என்று விரும்பினால், அவர்கள் அரசாங்கத்திடம் கடனுக்கு மனுசெய்து, அரசாங்கத்தின் மூலமாக கடன் உதவி பெற்று, அவர்கள் சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலும். இரண்டாவதாக, வீட்டு வசதி வாரியம் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு திட்டத்திலும் ஒதுக்குகிற வீடுகளில் 18 சதவீத வீடுகள் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்காக இன்றைக்கு ஒதுக்குகிறது. எனவே, இதன் மூலமாக அரசு ஊழியர்கள் சொந்தமாக வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியூர்களிலிருந்து மாறுதலாகி வரும் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய ஒவ்வொரு ஊரிலும் ஒரு குறிப்பிட்ட ஒதுக்கீடு வீட்டு வசதி வாரியத்தாலே செய்யப்படுமா? ஏனெனில், வசதியான வீடுகள் வாடகைக்குக் கிடைக்கவில்லை என்றால், சில ஊர்களுக்கு அரசு அலுவலர்கள் பணிக்கே வருவதில்லை. எனவே, சில வீடுகளை, காவல்துறை அதிகாரிகளுக்கு, மருத்துவத்துறை அதிகாரிகளுக்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு என்று ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்திலே இருக்கிற குடியிருப்பு வீடுகளில் எவையெல்லாம் காலியாக இருக்கிறதோ, அவை எல்லாம் அந்தப் பகுதிக்களுக்கு மாற்றலாகி வருகிறவர்களுக்கு உடனுக்குடன் கொடுக்கப்படுகின்றன என்பதையும், அங்கே பதிவுப் பட்டியல் வைக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்தவர்களுக்கு முதலிலே கொடுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 171, திரு. கி. பாலசுப்பிரமணியன் ; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

171--

பட்டுக்கோட்டையில் விதை நெல் சுத்தம் செய்யும் நிறுவனம் அமைத்தல்

***22743-திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--